Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானிய ௵ பங்குனி ௴ கூ௨ (19-3-39) { இல. 22

பெண்கள் கல்லூரி

யாழ்ப்பாணப் பட்டணப் பகுதியில் சைவப் பெண்களுக்கென ஓர் தனிக்கல்லூரியைத் தாபிக்கிறதற்குச் சைவவித்தியாவிருத்திச் சங்கம் செய்துவரும் முயற்சி பெரிதும் விரும்பத்தக்கது. இக்கல்லூரியின் நிதிக்கு டாக்டர் திரு. S. சுப்பிரமணியம் அவர்கள் பெருந்தொகைப் பணமும், திரு. R. சிவகுருநாதரவர்கள் விஸ்தீரணமான நிலமும் உபகரித்துள்ளனர். இவர்கள் போன்ற பரோபகாரிகள் மேற்படி கல்லூரி நிதிக்குப் பெருந்தொகைப் பொருள் உபகரிக்க முன் வருவாராக.

கூட்டுக் கல்வி

நமது நாட்டில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிரத்தியேகமான ஆங்கிலக் கல்லூரிகள் இருந்து வந்தன. சிலகாலமாக ஆண்களுக்கென ஏற்பட்ட கல்லூரிகளில் பெண்களுக்கும் இடங் கொடுக்கப்பட்டு வருகிறது. இது யாவராலும் விரும்பக்கூடிய ஒரு மாற்றமாகும். தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் எஸ். எஸ். ஸி. முதலிய வகுப்புவரையிலும் ஆண்களும் பெண்களும் கலந்து கற்கின்றனர். அவ்வாறு அவர்கள் ஏன் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிற் கற்கக் கூடாது. பெண்களுக்குரிய கல்லூரிகள் மிகக் குறைவாதலால் எல்லாக் கிராமத்தவர்களுக்கும் பெண்களைப் படிப்பிக்கும் வசதியில்லை. ஆதலால் ஆண்களுக்குரிய கல்லூரிகளில் பெண்களைப் படிப்பித்தல் பெற்றோருக்கு வசதியாகும். பெண்கள் அதிகமாகப் படிக்கும் பள்ளிக்கூடங்களில் பெண்களும் உபாத்தியாயினிகளாய் இருத்தலும் அவசியமாகும்.

உபாத்தியாயர்களும் பெற்றோரும்

(திரு. ஸி. யே. வாக்கி)

கல்வி கற்பிக்கும் விஷயத்தில் உபாத்தியாயர்களும் பெற்றோரும் பங்கு பற்றினாலன்றிக் கல்வி ஒருபோதும் பூரணப்படாது. பெற்றோர் தமது கல்விக் கடமைகளை நிறைவேற்றினாலன்றிப் பிள்ளைகளை முன்னேற்றமடையச் செய்தல் முடியாத காரியமாகும். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் உண்மைகளைக் கற்கிறார்கள்; வீட்டில் அவர்கள் அதை அனுபவத்தில் கையாளுகிறார்கள்.

ஒவ்வொரு பள்ளிக்கூடமும் பெற்றோரோடு சம்பந்தப்படும் வழிவகைகளைத் தேடவேண்டும். உபாத்தியாயர்கள் பெற்றோர் வீடுகளுக்குச் செல்லுதல் வேண்டும்.

பிள்ளைகளுக்கு அவரவர் நாட்டாசார முறைகளைப் பயிற்ற வேண்டும். நாட்டுச் சீர்திருத்தத்திற்குக் கல்விமுறைகாரணமாதலால் தக்கமுறைகளைக் கையாளவேண்டும். பிள்ளைகளுக்குள் சகோதரத்துவத்தை வளரச் செய்ய வேண்டும்.

கைத்தொழிற் பாடசாலைகள்

நமது நாட்டிற் கைத்தொழிற் பாடசாலைகள் போதியளவு வளர்ச்சியடையவில்லை. அதற்கு அரசினர் பல காரணங்களைக் கூறுகின்றனர். ஒரு சாகியத்தார் மத்தியில் அவரவர் தொழிலுக்கேற்பக் கைத்தொழிற் பள்ளிக்கூடங்கள் ஏற்படின் அப்பள்ளிக்கூடங்கள் எவ்வாறு விருத்தியடையாமலிருக்கும். கைத்தொழிற் பாடசாலைகள் கைத்தொழிலுள்ள இடங்களிலேயே ஏற்படுத்தப்பட வேண்டும்.

புனர் ஜன்மம்

ச. வரதராசன் (154)

“சாமி! ஒன்றே ஒன்று கொடுத்தாற் போதும். அந்த ஆசையைத் தீர்ப்பதற்குத்தானே!” என்றான் முனியன்.

“அதொன்றும் முடியாது பேசாமல் போடா” என்றார் சாமிநாதபிள்ளை. “அழுது அழுது அவன் மூஞ்சி வீங்கிப்போய்விட்டது. ஒரே ஒரு சீனா வெடிதானே கேட்கிறேன் சாமி!”

“பறைப்பயல்களுக்கெல்லாம் எதற்கடா சீனா வெடி. சும்மா சும்மா இங்கே நின்று சத்தம் போட்டாயோ நல்ல பூசைதான் கிடைக்கும்” என்று கூறிக்கொண்டே சாமிநாதபிள்ளை போய்விட்டார். அவர் தலை மறையும் வரை அவரையே பார்த்துக்கொண்டு நின்றான் முனியன்.

சாமிநாதபிள்ளை பெரிய தனவந்தர். முனியன் அவர் தோட்டத்தில் வேலை செய்யும் அடிமைப்பறையன். அடுத்த நாள் தீபாவளி. ஊர்ப்பையன்களெல்லாம் அன்றைக்கே சீனாவெடி சுடத்தொடங்கிவிட்டார்கள். இதைப் பார்த்துக் கொண்டு நின்ற முனியன் மகன் வீரனுக்கும் சீனாவெடி சுடவேண்டுமென்ற ஆசை பிறந்தது. மற்றப் பையன்களிடம் கேட்டு வாங்கலாமென்றாலோ அவர்கள் கொடுக்கிறார்களா? தன் தந்தையிடம் சென்று சீனாவெடி வாங்கித்தரும்படி கேட்டான் வீரன். முனியன் எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். வீரன் ஒன்றையும் கேட்பதாயில்லை. அழு அழு என்று அழுதான்.

அதன் பிறகுதான் முனியன் சாமிநாதபிள்ளையிடம் வந்து ஒரே ஒரு சீனாவெடி கேட்டுப்பார்த்தான். கல்நெஞ்சம் படைத்த அந்த மேல் சாதிக்காரரின் மனம் இதற்கு எப்படி இளகும்.

“அப்பா! சீனாவெடி........சீனாவெடி” என்று கதறி அழுதான் வீரன்.

“குழந்தாய் சீனாவெடிக்குப் பணம் வேண்டாமா? சும்மா யார் கொடுக்கிறார்கள்........எஜமான் பணமெங்கே கொடுக்கிறார். குடிக்கக் கூழும், கட்டக் கந்தையும்தானே கொடுக்கிறார். நானென்ன செய்வேன்.”

வீரன் கொஞ்ச நேரம் பேசாமலிருந்தான். அதற்கிடையில் யாரோ சீனாவெடி சுடும் சப்தம் கேட்கவே, “அப்பா!....... சீனாவெடி......உம்” என்று அழத் தொடங்கினான். முனியன் கண்களிலும் நீர் பெருகிற்று. ஏதோ யோசித்தவன்போல் திடீரென வெளியே ஓடினான். எங்கே போவான்? வெளியே இருந்த குப்பை மேட்டில் யாரோ சீனாவெடி சுட்டுவிட்டுப் போட்ட சிவப்புக் கடுதாசியிருந்தது. அதை ஓடிப்போய் எடுத்து ஒரு சீனாவெடியைப்போல் சுருட்டி நுனியிலே ஒரு திம்பை வைத்தான் முனியன். அதை எடுத்துக் கொண்டு வந்து வீரனிடம் கொடுத்தான். அடுத்த நிமிஷம் வீரனின் முகம் மலர்ந்தது. துள்ளிக் குதித்துக் கொண்டு அதைச் சுடுவதற்காக ஓடினான். முனியன் அவனைத்தடுத்து “வீரா! சீனாவெடியை இப்போது சுடாதே! சுட்டாயானால் பின்பு வெடி கிடையாது என்றான். வீரனும் அதைப் பார்த்துச் சந்தோஷம் கொண்டான்.

முனியன் ஏதோ காரியமாக வெளியே போனான். போய்விட்டு மறுபடி அவன் வந்தபொழுது வீரன் அழுது கொண்டிருந்தான். “அப்பா!.........அப்பா! நீ கொடுத்தது வெடிக்கவில்லை. அது வெடி இல்லையாம்,” என்றான் வீரன் அழுதுகொண்டே. இந்த அநியாயத்தைப் பார்க்க முனியனுக்குக் கண்ணீர் பெருகிற்று. “கோ” வெனக் கதறிவிட்டான் அவன்.

* * *

“முனியா! இந்தா 3 ரூபாய். இதற்குச் சீனாவெடி வாங்கிவா. சீக்கிரம் வரவேண்டும். பையன் அழுகிறான்.” என்றார் சாமிநாதபிள்ளை. முனியனின் மனம் “பகீர்” என்றது. இந்த 3 ரூபாய் நெருப்பில் போகப் போகிறதே! என்று அவன் மனம் படாதபாடு பட்டது. ஏதோ யோசித்தான். அவன் முகம் மலர்ந்தது. திரும்பி வரும்போது அவன் மடியில் 2 ரூபாய் இருந்தது. ஒரு ரூபாய்க்குச் சீனாவெடி வைத்திருந்தான். அந்த 2 ரூபாவை அவன் சாமிநாதபிள்ளைக்குக் காட்டவேயில்லை.

* * *

அன்று மாலை ரயிலில் முனியனும், வள்ளியும் (மனைவி), வீரனும் சென்னைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அந்த ஊரிலிருந்தால் தனக்கு “விமோசனம் இல்லை” என்றறிந்த முனியன் இப்படிக் கிளம்பிவிட்டான். வீரனின் கையில் ஒரு சீனாவெடிக் கட்டு இருந்தது. அதை அப்போது தான் முனியன் பார்த்தான். “இதேதடா சீனாவெடி.” என்றான் வீரனைப் பார்த்து.

“யாரோ ஒரு பையன் வைத்திருந்தான்; மெதுவாக எடுத்துவிட்டேன்” என்றான் வீரன்.

முனியனின் முகம் மாறுதல் அடைந்தது. “அந்தப் பேய்களின் சீனாவெடி நமக்கு வேண்டாம்” என்று கூறிக் கொண்டே வீரனின் கையிலிருந்த சீனாவெடியைப் பறித்து வெளியே எறிந்துவிட்டான். வீரனும் பயந்து போய் பேசாமலிருந்து விட்டான்.

* * * *

பல வருடங்கள் உருண்டன. ராமநாத் கம்பெனியின் மனேஜர் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். அப்போது ஒரு கிழவர் அங்கே ஓடிவந்தார்.

“என்ன வேணும் உங்களுக்கு” என்றார் மனேஜர்.

“ஒரு காரியம்.......”

“என்ன? சீக்கிரம் சொல்லுங்கள்”

“எனக்கு ஒரு பையன் இருக்கிறான். அவனுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எங்கள்பாடு.......”

இந்தச் சமயத்தில் அந்த அறையிலிருந்த இன்னொரு கிழவர் (மனேஜரின் தந்தை) ஓடிவந்து, “சாமி! எங்களிலே தொடவேண்டாம். நாங்கள் பறையர்....... மன்னிக்கவேணும் என்றார். “என்ன? என்ன?” என்றார்கள் வந்தவரும் மனேஜரும்.

“சாமி! நீங்கள் தானே சாமிநாதபிள்ளை.... நான் தான் முனியன்—பறையன்.—இவன் (மனேஜர்)என் மகன் வீரன். ஏதோ கூலி வேலைசெய்து இவனைப் படிப்பித்தேன்.

தமிழர் வீரம்

(தா. சிவபாதசுந்தரம், தோல்புரம்)

(முற்றொடர்)

அறத்தின் வழி நின்ற ஆரியர் கோனுக்கு முடி சூட்ட விரைகின்றான் மன்னர் மன்னன். இன்னல் செய்த இராவணன் இழைத்த தீமை எல்லாம் திரண்டுருவெடுத்த மந்தரையின் மாற்றத்தால் மனம் மாறிய கேகயர் கோமகள் 'ஆழிசூழ் உலகெல்லாம் பரதனே யாளவும்' இராமன், 'தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற் கொண்டும்' பதினன்காண்டு கானகத்தில் அலையவும் வேண்டும் என்னும் வரங்களை மன்னனிடம் வேண்டுகின்றாள். உடனே மன்னன் சோகமுற்று "கொள்ளா நின்செய் இவ்வரசு" என்று பரதனின் பண்பைப் பகருகின்றான். ஆ! என்னே அன்னாரின் வீரம்!!

பரதன் தன் தாயாம் கைகேசியின் சூழ்வினையால் தன் முன்னவன் நாடு துறந்து காடு போகவும் அதனால் மன்னர் மன்னவன் உயிர் துறக்கவும் நேர்ந்ததென்பதை உணர்ந்த காலத்து

"கொற்றவன் குடிமணக் கோலம் காணவும்
பெற்றிலை போலும் நின்பெரிய கண்களால்"

என்று தன் தந்தை தசரதனுக்கு இரங்கியும்

"இறந்தான் தந்தை ஈய்ந்த வரத்துக் கிழிவென்னு
அறந்தான் ஈதென் றன்னவன் மைந்தன் அரசெல்லாம்
துறந்தான் தாயின் சூழ்ச்சியின் ஞாலம் அவனோடும்
பிறந்தான் ஆண்டான் என்னுமி தென்னாற் பெறலாமே?"

என்று சினந்து தன் தாயின் தகாத செயலைக் கடிந்து அவளது செயலால் தனக்குற்ற பெரும்பழியை நினைந்து நினைந்து உருகினன். உருகி,

"என்றுன் பாவிக்கும்பி வயிற்றின் இடைவைகித்
தோன்றும் தீராப் பாதகம் அற்றென் துயர்தீர
சான்றும் தானே நல்லறமாகத் தவைஞாலம்
மூன்றும் காண மாதவம் யானே முயல்கின்றேன்."

என்று வீரமொழி கூறுகின்றான். ஆ! என்ன அன்னாரின் தியாகம்!! சத்தியம்!! இங்கு "நல்லறமே சான்றாக" என்று கூறும் மொழி அன்னாரின் உண்மை அறநெறியைக் காட்டுகிறது.

"மன்னின் பின்வள நகரம் புக்கிருந்து வாழ்ந்தானே பரதன்" என்னும் பழிச்சொல் இவ்வுலகில் நின்று நிலவாது காத்து வளநகரின் புறத்திருந்தே அருந்தவந் தொடங்கிய பரதனது மனப்பான்மையை யாரே கணிக்க வல்லார்.

தவமே உருவெடுத்தன்ன தலை மகனை பரதன் பதினன்காண்டு அருந்தவம் செய்தும் அண்ணல் அருள் செய்யாது கண்டு, எரியில் வீழ்ந்து இறக்கத் துணிகின்றான். "தன்புகழ் தன்னிலும் பெரிய தன்மையை" உடைய இவனது மனப்பான்மையை உணர்ந்த கோசலை

"எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின் அருளுக் காளாவரோ
புண்ணியம் எனும் நின்னுயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ"

என்று வாய்விட்டுக் கதறுகிறாள். ஆ! என்னென்பேன் பரதனின் பண்பை!! வீரத்தை! தியாகத்தை! தாயாயிற்றே யென்று கைகேசியின் சூழ்வினைக் கிணங்கி நடந்திருப்பனேல் பரதனை இப்புவனம் புகழுமா! ஆதலால் உண்மையை உணருங்கள்! உணர்ந்து உரமாகப் பிடித்து உயர்நிலை அடையுங்கள்!!

பிரகலாதனன்

பிரகலாதனனும் ஓர் பெரும் வீரனே. இரணியன் என்னும் அசுரன் தான்பெற்ற வரச் செருக்கினால் யாவரும் 'இரணியாய நம' என்று தன் பெயரையே உரைத்தல் வேண்டும் எனக் கடும் கட்டளையிட்டிருந்தான். அவனது கொடுங்கோலுக்கு அஞ்சி எல்லாரும் அக்கொடிய அரக்கனின் பெயரையே உரைத்தனர். இக்கொடிய இரணியனுக்குப் பிரகலாதனன் என்னும் பெருவீரன் இருந்தான். தக்க வயது வந்ததும் இரணியன் பிரகலாதனனை ஆரம்பத்தில் 'இரணியாய நம' என்று உரைக்கும்படி சொன்னார். பிரகலாதனன் மறுத்து விட்டான். முதன் முதலில் பகவந்தன் நாமத்தைச் சொல்லுதலே தர்ம நியாயமாக இருக்க அறநூலில் சொல்லியதற்கு மாறாகச் சொல்ல எங்ஙனம் அறச் செல்வனின் மனம் இசையும். அதிலும் திமிர் கொண்ட அரக்கனின் பெயரைச் சொல்ல அறவழி நிற்கும் பிரகலாதனனின் மனம் ஒப்புமா? எனவே பிரகலாதனன் 'ஹரி ஓம் நம' என்று பரமனின் பெயரையே பகர்ந்தனன். இதை அறிந்த தந்தை பிரகலாதனனுக்கு மதயானையை விட்டான். நஞ்சையூட்டினான். மலையிலிருந்து கீழே உருட்டினான். நினைக்கின் மயிர் சிலிர்க்கிறது. அறவழி நிற்கும் அறச்செல்வனுக்கு என்ன இடையூறுகள் விளைந்தன. நஞ்சுக்கு அஞ்சினனோ! மதயானைக்கு மயங்கினனோ! உருட்டலுக்கு உலறினனோ! ஆ, பாருங்கள்! இவ்வித இன்னல்களுக்கும் ஆளாகியும் அன்னார் உண்மையினின்றும் தவறினாரா? கூறுங்கள்! உணருங்கள் அவரின் வீர உள்ளத்தை! தரும நெறியை!! தியாகத்தை!!

(தொடரும்)

பின்பு உபகாரச்சம்பளம் பெற்றுப் படித்தான். "பி. ஏ" பட்டம் பெற்றான். இப்போது இப்படி இருக்கிறான். ஏதோ கடவுள் செயல்.......நாங்கள் அடிமைப் பறையர் தானே!" என்றார் கிழவர்.

"ஐயோ! முனியா! நான் உனக்குத் துரோகம் செய்தேன். மிருகம்போல் பாவித்தேன். அதற்குத் தக்க பயனை அடைந்துவிட்டேன்.... இப்போது நீங்கள் பறையரல்ல. நீங்கள் புனர் ஜன்மம் பெற்றுவிட்டீர்கள்." என்றார் சாமிநாதபிள்ளை. அவர் கண்களில் நீர் பெருகிற்று.

கருமுகங்காட் டாமல்என் றுங் கர்ப்பூரம் வீசத், திருமுகமே நோக்கித் திருக்கறுப்ப தெங்நாளோ.

கழுதையும் குரங்கும்

(ஸி. எஸ். ஜகதீசசுந்தரம்பிள்ளை)

ஒருநாள் ஒரு மரத்தின்மேல் வாலில்லாக் குரங்கு ஒன்று சில பழங்களைப் பறித்து வைத்துக்கொண்டு விநோதமாய்க் கடித்துத் தின்று கொட்டைகளைக் கீழே எறிந்து கொண்டிருந்தது. அந்தக் குரங்குக்குக் காது வெகு சிறியது; வால் அடியோடு இல்லவே இல்லை.

அவ்வழியே வந்த ஒரு கழுதை அதைப் பார்த்து, "இப்படியும் ஒரு விகாரமான பிராணி இருக்குமா! இதற்குக் காதோ மிகவும் சிறியது. வாலோ ஒரு அங்குலத்திற்குமேல் வெளியே எட்டிப் பார்க்கக் காணோம். என்ன அவலக்ஷணமான ஜந்து!" என்று எண்ணிற்று.

குரங்கு கழுதைக்கு நீண்ட காதும் நீண்டவாலும் இருப்பதைப் பார்த்து, "இது என்ன பிராணி! இதைப் பார்க்கும்போதே சிரிப்பு வருகிறது" என்று சொல்லிப் பல்லை இளித்து இளித்து சிரித்தது. கழுதை குரங்கைப் பார்த்துப் பெருங்குரலெடுத்துக் கத்திற்று. கழுதை கத்துவதைக் கேட்ட குரங்கு "நீ ஏன் இப்படிக் கத்துகிறாய் என்று கேட்டது.

அதற்குக் கழுதை, "நான் உன்னைப்பார்த்துத்தான் கத்துகிறேன்" என்று சொல்லிற்று. அதைக் கேட்டதும் குரங்குக்குக் கோபம் பொங்கினது. அதனால் அது, "நீ என்னைப் பார்த்துக் கத்துவானேன்?" என்று கேட்க, அதற்குக் கழுதை உனக்குக் காது வெகுசிறியதாக இருக்கிறபடியால் நீ ஒரு விகாரமான பிராணியாகத் தோன்றுகிறாய்; மேலும் உனக்கு வாலேஇல்லை; அதனாலேதான் எனக்கு இவ்வளவு சிரிப்பு உண்டாயிற்று என்று சொல்லிச் சிரித்தது. அதைக்கேட்ட குரங்கு "கீச் கீச்" என்று சப்தமிட்டு பல்லை இளித்து இளித்துக் கீச்சிட்டது. உடனே கழுதை மிகவுங் கோபமடைந்து, நீ என்னைப் பார்த்துப் பல்லிளித்து அழகுகாண்பிக்கிறாயா? அல்லது என்னை வேலையற்றவன் என்று நினைத்து உன் பற்களை எண்ணச் சொல்லுகிறாயா? என்று கேட்டது.

அதற்குக் குரங்கு வாழைப்பூவின் மடலைப்போன்ற நீண்டகாதையும் நடக்கும்போதும் திரும்பும்போதும் தடங்கலாக இருக்கும் நீண்ட வாலையுமுடைய உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்கு அடக்கமுடியாத சிரிப்பு உண்டாகிறது என்று சொல்லிச் சிரித்தது.

அதைக்கேட்ட கழுதை மிகவும் கோபமடைந்து குரங்கைப் பிடித்து உதைக்க எண்ணி அம்மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது. குரங்கோ மிகவும் தந்திரமுடையதாகையால் கீழேவராமல் மரத்தி னுச்சியிலேயே இருந்துவிட்டது. அதைப் பார்க்கக் கழுதைக்குக் குரங்கு அகப்படவில்லையே யென்று வயிற்றெரிச்சலாக இருந்தது. அதனால் அது வீணாகத் தொண்டை நோகக் கத்திக் கத்தி அடிமரத்தை உதைத்துக்கொண்டேயிருந்தது. அப்படி வெகுநேரம் உதைத்ததனால் காலில் வலியுண்டாயிற்று. கால் வலியால் உண்டான கோபமும் குரங்கு அகப்படவில்லையே என்னும் வருத்தத்தால் உண்டான கோபமும் பொங்க, "நாளையதினம் பிடித்து உதைக்கிறேன்" என்று சொல்லிப் பெருந்தொனியெடுத்துக் கத்திக் கொண்டே போயிற்று. தப்பினேன்! தப்பினேன்! என்று குரங்கு பல்லை யிளித்துக் கொண்டே அங்கிருந்த விளாங்காய்களைப் பறித்துக் கழுதையின் முதுகில் எறிந்து கோபத்தை மூட்டிற்று. குரங்கு மரத்தின்மேல் இருக்கும்போது கழுதையின் கோபம் என்ன பண்ணும். அது வாலைத் தூக்கிக்கொண்டு வண்ணன்வீட்டிற்கு ஓடிப்போயிற்று.

மேகம்

(S. R. தம்பு அவர்கள், புழதிவயல்)

1. ஆறு கடல்குள நீர்நிலை தன்னிலே
ஆச்சரிய மாக நீரெடுத்தே
பேறு கொடுக்கும் மழைத்துளி யாகவே
பெய்திடுவேன் பெரும் பூமியிலே

2. நீசினை யுண்டு கறுத்திருண் டேவரு
நேரத்தி லேநல் மயிற்குலங்கள்
சீரிய தோகை விரித்துநின் றாடலைச்
செப்ப முறவேநீர் பார்த்திடுவீர்

3. சூரிய வெப்பத்தி லாவியாய்த் தோற்றியே
துன்ப மற்றகுளிர் பட்டிடவே
மாரிப் பெயர்கொண்டு பூமியில் நாளு
மரங்கள் செழிக்க விறங்கிடுவேன்

4. வாடும் பயிர்முகச் சோகத்தை யாற்றி
வயிற்றுக் கொடுமை தணிப்பதற்குத்
தேடும் பொருளிங்கு யானன்றி வேறொன்று
செப்ப முடியாது தேசத்திலே

5. உண்ணும் உணவையுந் தந்திடுவேன் நல்ல
ஊற்றுச் சலமாயும் வந்திடுவேன்
பண்ணைக் கொடுக்குஞ் சலதரங்க மென்ற
பாட்டையும் பாடி முடித்திடுவேன்

6. கண்ணுக்கு வானவில் தந்திடு வேன்வெடி
காண்பித்து வானைக் கலக்கிடுவேன்
விண்ணிற் பலநிறங் கொண்டிடுவே னெனை
மேகமென் றேயிங்கு கூறுவரே.

விகடத்துணுக்குகள்

மீனாட்சி:— நீ கள்ளி என்று திட்டினதாகக் கேள்விப்பட்டேன்: என்னையா திட்டினாய்?

சோர்ணம்மா:— என்னப்பா இது? நீ ஒருத்திதானா உலகில் கள்ளி.

வெஞ்சே லெனும்விழியார் வேட்கைநஞ்சுக் கஞ்சினரை, அஞ்சேல் எனுங்கைக் கபயமென்ப தெந்நாளோ.

புன்னையரும்பு

மாலை நாலரை மணி. கதிரவன் தனது வெங்கதிரை ஒழித்துத் தண்கதிரைப் பரப்பிக் கொண்டிருக்கிறான். அக் கதிர்கள் கடலிற் தங்கக் கம்பிகளைப்போலத் துலங்கிக் கொண்டிருக்கின்றன. கடலிற் தோன்றும் நுரை கல்லிற்பட்டுஉருக்குலைவதைப்பார்த்து, அறிஞர்கள்அதனைத் தம்வாழ்க்கைக்கு உவமித்து மனச்சோர்வடைகின்றனர்.

அவ்வமையம்; பால்மணம் மாறாத சிவந்த வாயினையும், தொடர் நடையினையுமுடைய பரதவச் சிறுமியர், கடற்கரையிலுள்ள வெண்மையான மணலிற் சிற்றில் இழைத்துக் குதூகலத்துடன் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அச்சிறுமியரின் மனம் அவ்விளையாட்டிலேயே லயித்துப்போய் விட்டது. இவர்கள், இப்படிச் சந்தோஷமாக விளையாடுவதைப் பார்த்துச் சகிக்கமாட்டாமல், அவற்றை அழிக்க முயலுவதைப்போற் தூரத்திலோ ரலை தோன்றுகின்றது. அது மிகவும் பெரிய அலை. உறுமிக்கொண்டு விரைந்து வருகின்றது. அதோ, சிறுமியரின் சிற்றிலை அப்படியே வாரி அள்ளிக்கொண்டு செல்கின்றது.

உடனே, சிறுமியரின் கண்களில் நீர் ததும்புகிறது. துக்கம் நெஞ்சை அடைக்கிறது. அழுவதற்கு எத்தனிக்கிறார்கள். பின் ஒருவாறு அழுகையை அடக்கிக்கொண்டு மிகுந்த கோபத்தோடு கடலைப் பார்த்து, ஏ! கடலே நீ செய்யத்தக்க செயல் இதுவோ? இதுதானு உன தாண்மை? உனக்கிது அழகா? நாங்கள் எவ்வளவு பாடுபட்டுக் கட்டிய இந்த அழகிய வீட்டை என்ன துணிவு கொண்டு அழித்தாய்? சரி, இப்பொழுதே விரைந்து சென்று எங்கள் அன்னையிடங் கூறி, "உன்னை என்ன பாடு படுத்துகின்றோம் பார்!" என்று கூறித் தளதளத்த நடையில் மிகவுந் துரிதமாக ஓடுகின்றார்கள்.

அப்பொழுது அவர்கள் மார்பில் மிளிர்ந்து கொண்டிருந்த முத்தாரம் அற்றுத் தரையிற் சிதறுகின்றது. பக்கலிலுள்ள புன்னைமரங்களிலிருந்தெல்லாம் அரும்புகள் சொரிந்து கொண்டிருக்கின்றன. அச்சமையம் அதே வழியாக அநேகர் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களிலொரு சிலர், ஆ! எவ்வளவு அழகான புன்னையரும்புகள் பரவுண்டு கிடக்கின்றன, என்று, ஆவலோடு முத்துக்களை எடுக்கிறார்கள். வேறொரு சிலர், அதோ எவ்வளவு எழில் வாய்ந்த முத்துக்கள் சிதறுண்டு கிடக்கின்றன என்று, மகிழ்ச்சியுடன் புன்னையரும்புகளை எடுக்கிறார்கள். இப்படிப் புன்னையரும்பிற்கும், முத்துக்கும் வித்தியாசந் தெரியாது புன்னையரும்பை முத்தென்றும், முத்தைப் புன்னையரும்பென்றும் நினைத்துக் கையில் எடுத்ததின் பின் மயங்குகின்றார்கள்.

ஆகா என்னே! கவியின் திறமை. சிறுமியரின்மடமைத் தன்மையையும், முத்தின்மிகுதியையும், புன்னையரும்பின் சிறப்பையுங்கவி அப்படியேதத்ரூபமாகப்படம்பிடித்துக்காட்டுகின்றார். இவற்றைக் கீழேயுள்ளசெய்யுளால் அறியலாம்.

"முன்னைத்தஞ் சிற்றில் முழங்கு கடலோத மூழ்கிப்போக
அன்னைக் குரைப்ப னறியாய் கடலேயென் றலறிப்பெரும்
தன்மை மடவார் தளர்க்கருத்த வெண்முத்தம் தயங்குகானற்
புன்னையரும்பேய்ப்பப்போவாரைப்பேதுறுக்கும்புகாரேயெம்மூர்'

வீ. கனகலிங்கம், S. S. C. மாணவன்
முத்துத்தம்பி வித்தியாசாலை, திருநெல்வேலி.

இங்கே கத்தரிக்க

ஈழகேசரி இளைஞர் சங்கம்

முதலாண்டு மகாநாடு

இளைஞர் பேச்சுப் போட்டி விண்ணப்பம்

அன்பார்ந்த தாத்தா,

எங்கள் சங்கத்தின் முதலாண்டு மகாநாட்டில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள என்னையும் ஒருவராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

....

(கையொப்பம்)

முழுப் பெயர்..............................

பெற்றோர் பெயர்..............................

வயது.............. பிறந்த திகதி..............................

பாடசாலை..............................

விலாசம்..............................

....

வகுப்பு..............................

சந்தா எண்..............................

பேசப்போகும் விஷயம்..............................

திகதி.............................. /

....

தலைமை ஆசிரியர் கையொப்பம்

[இந்தப் பத்திரத்தை நிரப்பி, "தாத்தா", C/o 'ஈழகேசரி' சுன்னாகம் என்ற விலாசத்துக்கு 1-4-39-க்குப் பிந்தாது அனுப்பி வைக்கவேண்டும். உறையின்மேல் ஒரு பக்கத்தில் பேச்சுப்போட்டி என்று குறிப்பிடவும்.]

இங்கே கத்தரிக்க

கவியின் மனோதிடம்

பல நூற்றாண்டுகளுக்கு முன் தாராநகரத்தில் அரசு புரிந்து வந்த போஜராசனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவர் கொடையில் சிறந்தவர். கவிகளை ஆதரித்தவர். கவிச்சக்கரவர்த்திகளான காளிதாஸன், பவபூதி இவர்கள் அவர் ஸபையையே அலங்கரித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

இவ்விரு கவிகளில் யார் சிரேஷ்டர் என்ற கேள்விக்குச் சுலபமாய்ப் பதிலளிக்கமுடியாது. இதைப்பற்றிப் பார்வதி தேவிக்கும் பரமேசுவரனுக்குமே வாக்குவாதம் இருந்ததென்றால் அதிலிருந்து இவ்விஷயத்தைப் பற்றி முடிவுசெய்வது எவ்வளவு கடினமென்று நீங்களே தெரிந்து கொள்ளலாம். அந்த வாக்குவாதம் எவ்விதம் தீர்க்கப்பட்டது என்ற கதையைக் கேளுங்கள்.

மஹாதேவரும், பார்வதியம்மையும் தொண்டு கிழவரும் கிழவியும்போல் வேஷம்பூண்டு, கவிகள் ராசசபைக்குப்போகும் பாதைக்கருகில் ஒரு ஆழமான குழியை ஏற்படுத்தினார்கள். கிழவர் அந்தக்குழிக்குள்ளும், கிழவி மேற்புறத்திலும் நின்று கொண்டார்கள். அரசனைக்காணக் கவிகள் அவ்வழியே வர ஆரம்பித்ததும், கிழவி தோல்சுருங்கி மங்கலடைந்த தன் கண்களில் நீர் ததும்ப, துக்கத்தில் மூழ்கினவள்போல் காணப்பட்டாள். கருணைநிறைந்த அந்தக் கவிகள் ஒவ்வொருவரும் இதுகண்டு பரிதபித்தார்கள். பரபரப்புடன், "ஏன் தாயே ஏன் அழுகின்றனை"? என்று ஒருவர்கேட்க தழதழத்த குரலில் அந்த அம்மை "இதோ, இந்தக்குழியில் விழுந்துகிடக்கிறவர் என் வயது முதிர்ந்த பதி. இருவரும் இரவில் இந்த மார்க்கமாய் வந்துகொண்டிருந்தோம். முன்சென்ற அவர் இருட்டில் கண்தெரியாமல் குழியில் விழுந்துவிட்டார். பொழுது விடிந்ததும் இதைக் கண்ட சிலர் அவரைத்தூக்க முயன்றார்கள். அவர் அதைத் தடுத்து, தனக்கு ஒரு சுலோகத்தின் தத்துவம் விளங்காததால் அதைச் சிந்தித்து வழியைக் கவனிக்காமல் அந்தக் குழியில் விழுந்ததாகவும், அந்த சுலோகத்தின் அர்த்தம் தெளிவுறத் தெரிந்தாலொழிய குழியிலிருந்து தான் வெளியேறுவதில்லை என்று பிரதிக்ஞை செய்திருப்பதாகவும் தெரிவித்தார். அந்தப் பாமரஜனங்கள் சுலோகத்தின் கருத்தை என்ன கண்டார்கள்? ஆகையால் அவர்கள் ஒன்றும் செய்யமுடியாமற் போய்விட்டார்கள். உம்மைப் பார்த்தால் மகாகவி என்று தோன்றுகிறதே. நீர் அந்த சுலோகத்தின் பொருளை வெளிப்படுத்தி, கிழவரைக்கரையேற்றி எனக்கு மங்கிலியப் பிச்சைதாரும்" என்று வேண்டினாள்.

முதலில் வந்த கவி "சுலோகம், என்ன, சொல்லுங்கள்" என்று கேட்டார். கிழவி அதைச் சொல்ல கவி தனக்குத் தோன்றின பொருளைக் கூறினார்! அது சாதாரணமாய் யாருக்கும் புலப்படக்கூடியதே. இதைக்கேட்டுக் கிழவி குழியின் ஓரம் சென்று உரக்கக்கூவி (அவருக்குக் காதுகொஞ்சம் மந்தம்) தன்பதியைக் கூப்பிட்டு, சுலோகத்தின் பொருளைத் தெரிவித்தாள். அதற்கு அவர் "ஐயோ, அது அல்ல சரியான பொருள்" என்று தீனசுரமாய்ச் சொன்னார். அதைக் கேட்ட கவி "சரி, எனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். என்னைவிட மேதாவிகள், பின்னே வருவார்கள். அவர்களைக் கேளுங்கள்" என்று சொல்லிப் போய்விட்டார்.

பிறகு தண்டி, பாரவி முதலான 'நவரத்தினங்கள்' என்று வழங்கிவந்த மகாகவிகள் ஒருவர்பின் ஒருவராய் அவ்வழியே வர, கிழவி ஒவ்வொருவரையும் அந்தக் கேள்வியையே கேட்டாள். அவர்களும் அந்தவிடையையே அளித்தார்கள். கிழவரும் அழுகுரலில் அது தப்பு என்று மறுத்துவிட்டார். கவிகளும் தங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என்று சொல்லித் தங்கள்வழியே சென்றார்கள். பவபூதி ஒருவர்மட்டும் சற்றுநேரம் தான்கூறினபொருளுக்கு வியாகரண சாஸ்திரத்திலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்துக்காட்டிக் கிழவரைத் திருப்திசெய்யப்பார்த்தார். கிழவர் ஒப்புக்கொள்ளவில்லை. "இந்தக்குழியில் கிடந்து பட்டினியால் சாகவேண்டியதுதான் போலிருக்கிறது. இப்படி பாரதநாட்டில் வித்தை குன்றிப்போகும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே!" என்று அவர் ஓலமிடத்தொடங்கினார். பவபூதி அவருக்கு ஆறுதலாய், "மகாகவி காளிதாஜன் இவ்வழியே வருவார். ஒருவேளை சரியான கருத்தை அவர் எடுத்துரைத்தாலும் உரைக்கலாம்" என்று சொல்லிச் சபைக்குச் சென்றார்.

சற்றுநேரத்திற்கெல்லாம் காளிதாஜன் வந்தார். அந்த அம்மையின் கதையைக் கேட்டுச் சிரித்து, "சே! இதற்காக உயிர்திறப்பது பெரிய அசட்டுத்தனமல்லவோ; சரி, என்ன அந்த அதிசய சுலோகம்? சொல்லுங்கள், கேட்போம்"—என்றார். கிழவி அதைச் சொல்ல, மற்றக்கவிகள் கூறினபொருளையே அவரும் எடுத்துச் சொன்னார். "ஐயோ, அது தப்பாம். எவ்வளவோபேர் அதைச்சொல்லியும் அவர் அது தப்பு என்று மறுத்துவிட்டாரே" என்றாள் கிழவி. கவிக்கு வந்தது அடங்காக் கோபம். "இவ்வளவு சுலபமான சுலோகத்துக்கு அர்த்தம் தெரியாத்து போக, தெரிந்தவர் சொல்வது தவறு என்று கக்ஷி சொல்லும் மூட்டாள் இருப்பதிலும் இறப்பது சிலாக்கியம். அம்மா, நீங்கள் வருந்தாமல், சனியன் தொலைந்தது என்று வீட்டுக்குப் போங்கள், என்று ஆத்திரமாய்க் கூறினார்.

பளீர் என்று ஒரு மின்னல் தோன்றிற்று. கவி திடுக்கிட்டார். கிழவர், கிழவி, குழி ஒன்றையும் காணோம். விருஷபாரூடர்களாய் அயனும், அம்பிகையும், அவருக்குக் காட்சி புரிந்து நின்றார்கள். தலைவணங்கிக் கைகூப்பி நிற்கும் கவியைச் சுட்டிக்காட்டி, "பார்த்தாயா, தேவி, இவனன்றோ கவி! மனோதைரியமும், சந்தேகமற்ற ஞானமும், ஸமயோசித புத்தியும் இருப்பவன் கவியே திறமடையும்" என்று ஈசுவரன் கூறினார். பிறகு கவியை ஆசீர்வதித்துத் தேவ தேவர்கள் அந்தர்த்தானமானார்கள். இந்த வரலாற்றை யறிந்த பவபூதி முதலான மற்றக் கவிகளும் காளிதாஸன் மேன்மையை உணர்ந்து மெச்சினார்கள்.

—'பாரதமணி',

பச்சைநிற மாய்ச்சிவந்த பாகங் கலந்துலகை, இச்சையுடன் ஈன்றாளை யாங்காண்ப தெந்நாளோ.

நல்லான் அடித்த பொல்லாத பாம்பு!

எங்கள் தோட்டச் செய்கைக்கு நல்லான் நல்ல உதவியாயிருப்பான். புகையிலைக் கன்றுகள் அவனைக்கண்டால் தலை வணங்கி நிற்கும். நல்லான் இல்லையேல் தண்ணீர் இறைப்பு நடவாது. பயிர்களெல்லாம் வாடி வதங்கி விடும்.

சென்ற சனிக்கிழமை இறைப்பதற்கு வரும்படி ஐயா நல்லானுக்குச் சொல்லியிருந்தார். அவன் வழக்கம் போல் காலை நாலுமணியளவில் எங்கள் வீட்டுக்கு வந்து "தம்பி" என்று கூப்பிட்டான். "ஐயாவும், அண்ணாவும் தோட்டத்துக்குப் போய்விட்டார்கள். நீ கெதியாய்ப் போ நல்லான்!" என்று நான் சொன்னேன்.

நல்லான் மண்வெட்டியைத் தோளில் வைத்துக் கொண்டு வேகமாய்ப் போனான்.

நல்ல இருட்டு. ஒழுங்கையும் மிக ஒடுக்கமானது. ஒருபக்கத்திற் கறையான் புற்றுக்கள் ஏராளமாயிருந்தன. பாம்புக் கூட்டமொன்று எங்கோ இருந்து வந்து அங்கு குடியேறி விட்டதாகக் கதை. இரண்டுமாதங்களுக்கு முன் பால் விற்கும் இராமுவை ஒரு பாம்பு கடித்துவிட்டது. அடுத்த வீட்டுக் கோழிக்குஞ்சு மூன்று ஒரே நேரத்திற் காணமற் போய்விட்டன. அவற்றைத் தேடப் போன தாய்க்கோழி விஷந் தலைக்கேறி மூந்நாள் இறந்துவிட்டது. இவ்வளவும் அங்கு குடியேறிய பாம்புகளின் திருவிளையாடல்களே!

நல்லான் இவற்றை நன்கு அறிந்திருந்தான். ஆகவே தட்டித்தடவிச் சத்தம் போடாது அந்தப் பொல்லாத பாதையில் நடந்து கொண்டிருந்தான். பாம்பு வந்தால் ஒரேயடியாக வெளுத்து வாங்கவேண்டுமென்று மண்வெட்டியையும் யுத்தத்திற்குத் தயாராக வைத்துக்கொண்டான். யுத்தத்தில் வெற்றிகொண்டால் தனக்கு வரப்போகும் புகழ்மாலையை எப்படி அணிந்து கொள்வது என்றும் யோசித்துக்கொண்டே போனான்.

இஸ் ஸ் ஸ்! என்ற ஒரு சத்தம் அவனைத் திடுக்கிடச் செய்தது. அடுத்த நிமிஷம் ஓர் பாம்பு அவன் காலிற் தடக்குப்பட்டது. யுத்தம் ஆரம்பமாயிற்று. மண்வெட்டியால் "சடாம், பிடாம்" என்று நல்ல அடி கொடுத்தான். பாம்பு தோற்றுவிட்டது. நல்லான் வென்றான்! செத்த பாம்பு காற்றில் உயிர்க்குமென்று அவன் எண்ணினான். வேலியோரமாக ஓர் கிடங்கு வெட்டித் தன் பகைவனி னுடலை அதற்குட் புதைத்துவிட்டு வெற்றி கொண்ட கர்வத்துடன் மண்வெட்டியுங் கையுமாகத் தோட்டத்துக்குப் போனான்.

நல்லானைக் காணவில்லையே என்று ஐயா கோபத்தோடு நின்றார். வழியில் நடந்ததெல்லாம் நல்லான் சொன்னான். ஐயா அவனைப் புகழ்ந்தார். "மண்வெட்டி உடைந்தாலும் பறவாயில்லை. அந்தப் பொல்லாத பாம்பைக் கொன்று விட்டாயே. கெட்டிக்காரன்!" என்று வாயார வாழ்த்தினர் ஐயா.

அண்ணா, தான் இப்படியொரு கெட்டித்தனத்தைச் செய்ய முடியாமற் போயிற்றே என்று துக்கப்பட்டார். எப்படியும் வீட்டுக்குப் போகும்போது பாம்பைப் பார்க்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் இறைக்கத் தொடங்கினார்கள்.

நல்லானுக்குத் துலாமிதிப்பிற் புலன் செல்லவில்லை. பாம்பு கடியாமல் விட்டதற்காக முருகையாவுக்கு ஒரு பணத்துக் கற்பூரம் கொளுத்துவதாகச் சொல்லிக்கொண்டான். தனக்கு 'ஊரிலே பேர் கிளம்பப் போகிறதே என்றதை நினைக்க அவன் கால் துலாவிற்படுவது கூட அவனுக்குத் தெரியாது போய்விட்டது. எப்போ இறைப்பு முடியும்; தன் வீரத்தை ஊராருக்குச் சொல்ல வேண்டுமே என்று துடிதுடித்தான். அப்பாடா! ஒரு வாறு இறைப்பும் முடிந்தது.

நல்லான் வேர்வையைத் துடைத்துக் கொண்டு மண்வெட்டியைத் தூக்கித் தோளில் வைத்தான். எல்லாரும் வழி நடந்தார்கள். நல்லான் பாம்பைப் புதைத்த கிடங்கைக் காட்டினான். அண்ணா மண்வெட்டிப் பிடியின் நுனியிற் பிடித்துக்கொண்டு கிளறினார். அதிக ஆழம். பாம்பு தென்படவில்லை. "இஞ்சை விடத் தம்பி" என்று சொல்லிக் கொண்டே நல்லான் மண்ணைக் கொஞ்சங் கொஞ்சமாக வெளியேற்றினான். பாம்பைக் காணாதும் அண்ணாவும், ஐயாவும் நல்லானை நம்பவில்லை. நல்லானுக்குக் கோபம் பொங்கி வழிந்தது. செத்த பாம்பை இன்னுஞ் சாக அடித்துவிடுகிறேன் வரட்டும். என்று மீண்டுங் கிளறினான்.

தென்னந் தும்பு, ஆம், தென்னந்தும்பு கொஞ்சமாக வெளியே வந்துகொண்டிருந்தது. அதோ! ஓர் கயிற்றுத்துண்டும் வெளியேறிவிட்டது! "அட நல்லான்! பட்டைக் கயிற்றைப் பாம்பென்றடித்து மண்வெட்டியையும் முறித்துப்போட்டாயடா!" என்று ஆத்திரத்தோடு சொன்னார் ஐயா. "அடித்த கயிற்றைப் புதைத்தும் போட்டானே" என்று சிரித்தார் அண்ணா! 'இறைத்துவிட்டு வந்த சுப்பையா "நானெல்லோ பட்டைக் கயிற்றைப் போட்டுவிட்டேன். இனி ஒன்று வாங்க ஆறுபணம் வேண்டுமே" என்று சொல்லித் துக்கப்பட்டார்.

இந்தச் சமயத்தில் "பட்டைக் கயிற்றைப் பாம்பென்று வெளுத்து வாங்கிய" நல்லான் மனம் என்ன பாடுபடும். யோசித்துப்பாருங்கள். தன்னை அணுப்பிய பட்டைக்கயிற்றை இன்னுந் தும்பாக்கப் பார்ப்பானோ?

சி. அரசரத்தினம் (180)
உடுவில் தெற்குச் சைவவித்தியாசாலை

ஆதியந்தங் காட்டா தகண்டிதமாய் நின்றுணர்ந்தும், போதவடி வாம்அடியைப் போற்றுநாள் எந்நாளோ.

ஈழகேசரி இளைஞர் சங்கம்

அன்பான குழந்தைகாள்!

இப்போது சிலவாரங்களாக எனது பேரன் பேத்திகளிற் பலர் பெரிய பாடுபடுகின்றனர். "எனது வயது இன்னும் ஒரு மாதத்தில் முடிந்தால் தாங்கள் என்னைப் பிரஷ்டம் செய்து விடுவீர்களல்லவா?" என்று ஒரு பேரன் எழுதுவதைப் பார்த்தால் எனக்கு அது மிகுந்த உருக்கமாகத்தானிருக்கிறது. இளைஞர் சங்கத்திலுள்ள பிள்ளைகளின் வயது எல்லை 16 என வைத்ததும் அந்த நேரம் இருந்த வசதிகளைப் பார்த்துத்தான். ஆனால் தமிழ் J. S. C., S. S. C. வகுப்பில் படிக்கும் மாணவர்களிற் பலர் இந்த வயதெல்லைக்குள் தங்கள் படிப்பை முடிக்க மாட்டார்களென்று எனக்கு இப்போது கொஞ்சநாட்களாக நெருக்கடியான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. "எங்களையெல்லாம் இப்படித் தள்ளிவைத்தல் தகாது. நாங்களும் தமிழ் மாணவர்கள் தானே" என்று அவர்கள் முறையிடுகின்றனர்.

ஆகையால் தாத்தா பார்த்தார்; இவர்களுடைய குறைகளையும் கவனிப்பது நமது கடமைதானென்று கண்டு இன்று தொடக்கம் இளைஞர் சங்கத்தின் வயதெல்லை 18 என்று தீர்மானமாகிவிட்டது. ஆகையால் 18 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்கள் எமது சங்கத்தில் சேர உரிமையுள்ளார்கள். இதை அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் அவதானிப்பதுடன் மற்றும் நண்பர்களுக்கும் சொல்லிவைக்கவும்.

சில அங்கத்தவர்கள் தங்கள் முழு விலாசத்தையும் தராது ஊர்ப்பெயரை மாத்திரம் கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக: து. சின்னத்துரை, மானிப்பாய் என்றிருக்கிறது. இவருக்குக் கடிதமெழுதினல் தபாற்காரன் எப்படி விலாசத்தைக் கண்டுபிடிப்பது. இதற்காகத்தான் நான் முன்னொருமுறை எல்லோரையும் சரியான விலாசம் தரும்படி கேட்டிருந்தேன். மகாநாட்டு அழைப்புக் கடிதம் எல்லா அங்கத்தவர்களுக்கும் தனித்தனி அனுப்பப்படுமாகையால் அவர்கள் விலாசங்கள் இன்றியமையாதது. ஆகையால் பின்வரும் எண்ணுள்ள சந்தாதாரர்கள் உடனே தங்கள் பாடசாலை விலாசத்தைக் குறித்தனுப்புவார்களாக:— 1, 2, 3, 8, 9, 15, 20, 32, 35, 45, 48, 50, 51, 68, 100, 107, 190, 201; இனிமேல் விண்ணப்பித்துக்கொள்பவர்களும் பாடசாலை விலாசத்தையே கொடுக்கவேண்டும்.

—தாத்தா.

தாத்தா பதில்

சி. இரத்தினம் (180) கடிதமெழுதும்போது சந்தா எண்ணைக் குறிப்பிடத் தவறவேண்டாம். இது நீர் இன்னார் என்பதை நான் பழைய பேரேட்டில் பார்த்துக்கொள்ள வசதியளிக்கும். உமது விஷயம் பிரசுரிக்கப்படுகிறது. முன்னர் அனுப்பிய விஷயம் "தொடரும்" என்று குறித்து அனுப்பியிருந்தீர். தொடரும் விஷயங்கள் எங்களுக்கு முடிந்ததாக வேண்டும். இல்லாவிடில் மிகுதி வரும் என்று நாம் காத்திருக்க முடியாது. முழு விஷயத்தையுமனுப்பினல் பார்த்துவிட்டுப் பிரித்துப் பிரசுரிக்கலாம்.

மூ. தையல்நாயகம் நீர் எங்கள் சங்கத்தில் சேர்வது மிகுந்த சந்தோஷத்தையளிக்கும். கல்வியனுபந்தத்தை நீர் இவ்வளவாகப் புகழ்ந்து பேசுகின்றீர். அதெல்லாம் உம்முடைய சகோதர சகோதரிகளின் முயற்சிதான் என்பதை யறிவீரா? ஆகையால் நீரும் சேர்ந்துகொண்டால் கட்டுரை யெழுதலாம். போட்டிகளிற் பங்குபற்றலாம். உம்முடைய கேள்விகளுக்கு தாத்தா விடையளிப்பார். பொது அறிவு விருத்தியாகும். சேர்வதில் கஷ்டமொன்றுமில்லை. கல்வியனுபந்தத்தில் காணப்படும் விண்ணப்பப்பத்திரத்தை நிரப்பி அத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாவாக அனுப்பிவிட்டால் உமக்கு ஒரு சந்தா எண் தரப்படும். பின்னர் ஆறுமாதத்தின் பின் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். வருகிற மாதம் 22-ந் தேதி யாழ்ப்பாணத்தில் எங்கள் மகாநாடு கூட்டப்போகிறோம். அதைப் பற்றிய வரலாறுகளை உமது நண்பரிடம் விசாரித்துக்கொள்ளும். விலாசத்தில் உமது பாடசாலையைக் குறிக்கவேண்டும்.

எஸ். முருகானந்தன் (125) உமது விஷயங்களிற் பல என்னிடமே யிருக்கின்றன. அவைகளை யெல்லாம் உமக்கனுப்புவதால் பயனில்லை யென்பதை உமக்குத் தெரியப்படுத்துகிறேன். அப்படியல்ல என்று வேண்டுமானல் ஆறுசத முத்திரையனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். கல்வி மலருக்கு நீர் எதுவும் அனுப்பலாம். பார்த்துவிட்டு விரும்பியதையே நான் பிரசுரிப்பேன். சித்திரங்கள் நல்லதானல் அனுப்பவும். சிறுகதை அடுத்தடுத்த முறை வெளிவரும். போட்டிப் பரிசு பெறத்தவறிய கதையானல் காரியமில்லை. பிரசாம்பெற்ற விஷயமாயிருக்கவேண்டும்.

சி. சிவபாதம் (116) அப்பாடா, இவ்வளவு காலத்துக்குப்பிறகுதான் என் பேரனுக்குக் கருணைவந்ததோ? இந்தப் பழங்கட்டைகளால் என்ன பயன் என்று நினைத்திருந்தீரோ? கடிதத்துக்கு மிகவும்சந்தோஷம். மகாநாட்டுக்கு வருவீர்தானே? நீர் அனுப்பியதாகச் சொல்லும் இரண்டு 6 சத முத்திரைகளில் ஒன்றுதான் எமக்குக்கிடைத்தது. ஆகையால் மற்றதையும் உடனே அனுப்பி வைத்தால் சந்தா புதுப்பிக்கப்படும்.

இ. பொன்னுத்துரை (99) உமது விஷயம் "விடாமுயற்சி" மிகவும் பெரிய மார்க்கத்திலிறங்கிவிட்டது. வேதார்தம் இப்போது உமது சகோதர சகோதரிகளுக்கு விளங்காது. இது உமது சொந்தக் கற்பனையா அல்லது வேறுயாருடைய உதவியுமா? சொந்த முயற்சியாயிருந்தால் பிழைகளிருந்தாலும் தாத்தா திருத்திப் பிரசுரிப்பார். வேறெதற்காகத் தாத்தா இருக்கிறார்?

வ. சின்னத்துரை (189) ழகர ளகர பேதத்தைக் கவனிக்கவேண்டும்.

புதிய அங்கத்தவர் (முற்றேடர்)

223. R. K. சண்முகம்
224. ஆ. சோமசுந்தரம்

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி' லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஞு மார்ச்சு 19உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.